# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மழை:
# சிமெண்ட் மூடி திறக்கப்பட்டது!



**நமது நிருபர்**

கோலாலம்பூர், அக்.6-
சமூக வலைத் தளங்களில் பரவியதைப் போல் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் சிமெண்ட் மூடி சீரமைப்பு அணுகுமுறைகளை இண்டா வாட்டர் நிறுவனம் மேற்கொண்டது.

சாக்கடை துவாரம் காணாமல் போன காரணத்தால் மேல் பகுதியில் உள்ள சிமெண்ட் மூடி திறக்கப்பட்டுள்ளது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.



இச்சம்பவம் உண்மையில் வன்முறையால் நிகழ்ந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இந்த சாக்கடையின் துவாரத்தை மூடி இச்சம்பவத்திற்கு இண்டா வாட்டர் நிறுவனம் கடந்த சனிக்கிழமை அதிகாலையில் தீர்வு கண்டு விட்டதாக ஓர் அறிக்கையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.